**யட்டவத்த பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

--------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டவத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

(அ) வாலவெல சிகிச்சையகம் மற்றும் பாலர் பாடசாலைக்கான கழிவறைத் தொகுதியை நிர்மாணித்தல், சபை வளாகத்தில் உயிர் வாயு பிரிவொன்றினை அமைத்தல் மற்றும் சபை காரியாலயத்தினை அபிவிருத்தி செய்தல் ஆகிய 3 நிர்மாணங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபா. 1,064,718 கணக்கீடு செய்யப்பட்ருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்தப்பட்டிருந்த கிரீன் பாக் நீர்ப்பாசனத் திட்டத்துடன் தொடர்பான அபிவிருத்திச் செலவாகிய ரூபா. 1,103,347 கணக்கீடு செய்யப்பட்ருக்கவில்லை.

(இ) மஹவெல மற்றும் மதியாபொல சுனில தியதஹர ஆகிய இரு நீர்ப்பாசனத் திட்டங்களையும் பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் மோட்டர்கள் இரண்டினதும் ஸ்டாடர் சுவிச் ஒன்றினதும் மொத்தப் பெறுமதியாகிய ரூபா. 576,235 கணக்கீடு செய்யப்பட்ருக்கவில்லை.

(ஈ) புற நெகும திட்டத்தின் கீழ் 2017 ஜனவரி 3 ஆம் திகதி சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த அச்சு இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்ருக்கவில்லை.

(உ) 14 குழாய்க் கிணறுகளைத் திருத்தியமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பொருட்களின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் களஞ்சியத்தில் காணப்பட்ட 5 நீர்மானிகளினது பெறுமதி ஆகியன கணக்குகளில் பதியப்படாமையினால் பொதுக் களஞ்சிய மீதி ரூபா. 287,079 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் யட்டவத்த இலங்கை வங்கிக் கிளையில் பேணப்பட்டு வந்த 5348900 ஆம் இலக்க கணக்கின் மீதியான ரூபா. 38,957 கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மீதி ரூபா 51,000 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 6 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,276,524 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3 வருட காலமாக தீர்க்கப்படாத ரூபா 173,835 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 7 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,404,936 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 572,045 ஆன மீதி அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

---

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

---

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 62,685,274 ஆன 4 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாமல் இருந்தன.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான** தொடர்பு | **இணங்காமை** |
|---|---|
| (அ) 1893 இன் 9 ஆம் இலக்க மாடுகளைக் கொல்லும் கட்டளைச் சட்டம் | |
| (i) 6 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற மாடுகள் கொல்லும் இடத்திற்காக, வழங்கப்பட வேண்டிய பிணை உறுதியொனறு அல்லது உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9 ஆம் பிரிவு | மாடுகள் கொல்லும் இடத்திற்காக முறையாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று காணப்படவில்லை. |
| (iii) 10 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டின் போது 108 மாடுகள் கொல்லப்பட்டிருந்ததுடன் தகைமை வாய்ந்த அதிகாரிக்கு வழங்கப்பட வேண்டிய விபரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |
| | (i) 217 ஆம் விதி | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ்.46 மாதிரியின் பிரகாரம் பதிவேடொன்று நாளாதுவரையாக பராமரிக்கப்பட்டிருக்க வில்லை.. |
| | (ii) 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள், வீதிகள், மயானங்கள், விளையாட்டரங்குகள், பொதுக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் மற்றும் வாகனங்கள் தொடர்பாக சபையின் ஆரம்ப முதல் இதுவரை கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571 | ரூபா 289,897 பெறுமதியான 15 நிர்மாண வேலைகளுக்கான காலாவதியான நிறுத்தி வைக்கபப்பட்ட பணம் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பட்டோலையின் A இன் அ பகுதியின் 31 ஆம் பிரிவு | சபையினால் வழங்கப்பட்ட CPC/YPS/ TL/ 2017/02 அனுமதிப்பத்திரத்தின் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் கொலைகளத்திற்காக மத்திய சுற்றுாடல் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணப்பின் பிரகாரம் வாகனம் தொடர்பாக பதிவொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) லொரியொன்றின் என்ஜின் சம்பந்தப்பட்ட பழுதொன்றினைத் திருத்தியமைப்பதற்கும் சேவை செய்வதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் பெறப்பட்ட மதிப்பீடொன்று அல்லது திருத்தம் முறையாக மேற்கொள்ளப்பட்டதற்கான உத்தியோகத்தர் ஒருவரிடம் பெறப்பட்ட சான்றிதழ் இன்றி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா. 91,302 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) டிரேலர் ஒன்றினை திருத்தியமைக்கும் போது விரிவான மதிப்பீடொன்றோ திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் விளக்கமான விலைப்பட்டியலோ சமர்ப்பிக்கப்படாத நிலையில் திருத்தம் முறையாக மேற்கொள்ளப்பட்டதென தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா. 100,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் கொங்ரீட் கலவை இயந்திரமொன்றினை திருத்தியமைப்பதற்காக முறையே ரூபா 27,040 மற்றும் ரூபா. 61,050 செலுத்தப்பட்டிருந்த போதும் அத் திருத்தியமைப்புக்களுக்கான முறையான உத்தியோகத்தர் ஒருவரினால் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு காணப்படவில்லை.

(ஈ) லொரியொன்றினை திருத்தியமைப்பதற்காக அரசின் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 9.3.1 (ஆ) பிரிவிற்கமைய அமைச்சின் செயலாளரின் ஆரம்ப அனுமதி பெறப்படாது மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா. 418,415 செலுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த நிதியை உள்ளுராட்சி மற்றும் மாகாண சபைகள்

அமைச்சிடமிருந்து மீள்நிரப்பல் செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,166,135 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,310,121 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,010,200 | 1,074,882 | 1,561,829 | 270,228 | 1,133,000 | 1,107,202 | 1,084,107 | 144,422 |
| (ii) | வாடகை | 2,286,506 | - | 814,226 | 14,500 | 2,473,000 | - | 2,666,265 | 84,125 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 395,370 | - | 370,894 | - | 883,050 | - | 880,814 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,820,704 | - | 1,541,696 | 202,714 | 1,441,300 | - | 1,100,430 | 142,924 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

**(அ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு இறுதி திகதியில் ரூபா 30,284 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதி நிலவியது.

**(ஆ) கழிவுப்பொருட் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை கழிவுப்பொருட் கட்டணம் மீதி ரூபா 34,800 ஆக இருந்தது.

**(இ) நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் 5 நீர் முன்மொழிவு திட்டங்களிலிருந்து ரூபா 205,205 ஆன நிலுவை நீர்க் கட்டணம் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை

#### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகைக் கட்டணம் மீதி ரூபா 14,500 ஆக இருந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 290,500 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 9,045,784 ஆக இருந்தது.

**2.3 மிகை அறவீடு**

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,259 மிகை அறவீடாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 10 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த வெளியிட்டு மட்டத்தை அடையாமை**

பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,506,580 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த வெளியிட்டு மட்டத்தை அடையாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | செயற்பாடு | மதிப்பீட்டு தொகை / நிதிஏற்பாடு | நிறைவேற்றப்பட்ட அளவின் பெறுமதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| (i) | டங்கன் முன்பள்ளியின் மலசலகூட முறைமையை மேம்படுத்துதுல் - | 800,895 | 401,877 | i நிதி ஏற்பாடு 2017 ஒக்தோபர் 19 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் நிறை வேற்றுவதற்கு போதியளவில் காலம் காணப்படாமை<br>ii. மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 139,994 ஆன 11 வேலை விடயங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை.<br>iii. நிறை வேற்றப்பட்ட 9 வேலை விடயங்கள் மதிப்பிடப்பட்ட அளவினை விட 20% இற்கும் 60% சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | iv | 24 வேலை விடயங்களின் கீழ் ரூபா ரூபா 63,556 பெறுமதியான அலுமினியம் கதவுகளை பயன்படுத்துவதற்கு<br><br>மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக பலகை கதவுகள் இடப்பட்டு மரப் பாதுகாப்பு மற்றும் அல்லது பூச்சு பூசலோ இடம்பெற்றிருக்கவில்லை. |
| | | | | v | நிர்மாணிப்பதற்கு எதிர் பார்க்கப்பட்டிருந்த இரண்டு மலசலகூட முறைமைகளுக்காக ஒரு முறைமையொன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | பதிங்கஸ்கொட்டுவ நீ முன்மொழிவு முறைமை திருத்த வேலைகள் மற்றும் மேம்படுத்துதல். | 1,292,246 | 687,375 | | ரூபா 100,288 ஆன பெறுமதியான 5 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மதியபொல நீர் செயற்திட்டம் - | 1,050,421 | 417,328 | | ஒதுக்கீடு செய்த பணத்தில் உச்ச பயனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) எதிர்பார்த்த நலன்கள் கிடைக்காமை**

2012 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை ரூபா. 3,692,885 செலவில் டன்கன்வத்த ஆரம்பப் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் திட்டத்தின் மூலம் வினைத்திறனான பலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக முறையான திட்டமொன்றினை வகுத்து ஆரம்பப் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்காவினை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

திட்டத்தினை முன்வைப்பதற்கும் அதன் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் முன்னர் முறையான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்படாததன் காரணமாக அம்பன்பொல ரன்தியதஹர சமூக அமைப்பிற்கான குழாய்க் கிணறொன்றினை அமைத்தல் மற்றும் பம்பி வழங்குவதற்காக மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி வழங்கலின் கீழ் மீளாய்வாண்டினுள் பெறப்பட்ட ரூபா. 700,000 நிதி ஒதுக்கீட்டின் மூலம் திட்டத்தினை செயற்படுத்த முடியாது போயிருந்தது.

**(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

(i) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பட்டோலையின் ஆ பகுதியின் 27 மற்றும் 28 பிரிவின் பிரகாரம் சபை நடாத்திச் செல்லும் கழிவுப்பொருள் செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்ட பூமியை சபைக்கு கைஏற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவு முகாமைத்துச் செயற்பாட்டிற்காக 2012 ஆம் ஆண்டளவில் மாகாண நிலைபேறான அபிவிருத்தி வழங்கல் மற்றும் சபை நிதியின் மூலம் ரூபா.

659,062 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 700,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொம்போஸ்ட் தொகுதியினைப் பயன்படுத்தி கொம்போஸ்ட் உற்பத்தி மேற்கொள்ளப்படாததுடன் அக்கட்டிடங்கள் எதிர்பார்க்கப்பட்ட விதத்திலான கழிவுப்பொருள் முகாமைத்துவ நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் கீழ் சபை மூலம் தாய் மற்றும் சிறுவர் சுகாதாரத்தை மேம்படுத்துதல், உணவு உற்பத்தி பரிசோதனை, வறுமையை ஒழித்தல் மற்றும் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாத்தல் போன்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உரிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகள் இணங்காணப்பட்டிருந்த போதிலும் போதியவு பதவியணியினர் இல்லாமை, குறைந்த வருமானம் பெறக்கூடிய சபையொன்றாக இருத்தல் பயிற்சிகளுக்காக நிதிஏற்பாடு குறைவாக இருத்தல் மற்றும் பயிற்சி வளவாளர்கள் மற்ம் நிறுவனங்களை இனங்காண முடியாமை போன்ற குறைபாடுகள் காரணமாக அந்நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்ளல் சிக்கல் வாய்ந்த நிலைமையொன்றக இருந்தது,

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை தனது செயற்பாட்டுப் பிரதேசத்தினுள் பொது சுகாதாரத்தினை மீளொழுங் படுத்தும் மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகார சபையாக செயற்பட வேண்டியிருந்த போதும் சபையின் செயற்பாட்டுப் பிரதேசத்தினுள் சபையினால் பராமரிக்கப்படுகின்ற 5 நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றில் நீரின் தரம் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 4 நீர்சசெயற்திட்டங்களினூடாக விநியோகிக்கப்படுகின்ற நீர் தொடர்பான தரப் பரிசீலனை அறிக்கைகளுக்கமைவாக நீர் குடிப்பதற்குப் பொருத்தமான நிலையில் இல்லாதிருந்த போதும் சுத்திகரித்தல் செயன்முறைக்கு உட்படுத்தி அதனை குடிப்பதற்கு உகந்த நீராக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியத்திற்கு செலவுவைக்கப்பட் வேண்டிய ரூபா 148,968 பெறுமதியான 8 பெறுவனவுகள் வருமான்திற்கு எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளைப் பலப்படுத்துவதன் கீழ் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 4 நிர்மாணங்களுக்காக ரூபா 3,473,050 தொகை மீளாய்வாண்டில் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தொகையை மீள் நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமை**

**ஊழியர் மிகை மற்றும் பற்றாக்குறை**

7 பதவிகளுக்குரிய 15 ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இந்த ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபையனிக் வேலைகளுக்கு இடையூராக அமைந்திருந்தது.

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த 94 கட்டிட விண்ணப்பங்களில் 60 இற்காக அனுமதி வழங்கப்பட்ட போதும், 05 விண்ணப்பங்களிற்கு மாத்தரமே இணக்கச் சான்றிதல்கள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவர அறவீடு இடம்பெறாமல் இருந்ததுடன் 2013 யூலை 09 ஆந் திகதிய சீபீசீ/எஸ்எல்ஜீ/எம்/7/7/1/1/9 ஆம் இலக்க மாத்தளை

மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து வீதவரி அறவிடுவதற்கு அபிவிருத்தி அடைந்த பிரதேசங்காக பிரசிதப்படுத்துவற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

மவுன்டன்ட் வீவ் காட்டின் காணி செயற்திட்ட ரதல குளததின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 2,052,063 றெதியான நீர் செயற்திட்டத்தை சபைக்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

பதிங்கஸ்கொட்டுவ நீர்ச்செயற்திட்ட நிர்மாணத்திற்காக 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 66,780 ஆன பெறுமதியுடைய 90மிமீ' 20 மி.மீ அளவிலான 280 பெரிய செடல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

## 3.6 பெறுகை செயற்பாடு

### 3.6.1 பெறுகை திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்படாமல் 2017 சனசரி முதல் திசெம்பர் வரைரூபா 2,508,652 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.6.2 பெறுகைகள் மற்றும் சேவைகள்

மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.8.1 (அ) மற்றும் 2.8.4 பிரிவுகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாதிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.11.3 (அ) பிரிவின் பிரகாரம் குழுக்கூட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் பெறுகைகள் பட்டியல் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா. 529,795 பெறுமதியான கொள்வனவுகளுடன் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்கையில் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் பிரகாரம் சுருக்கமான மற்றும் தெளிவான செலவு விபரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்த தீர்மானங்களை நியாயப்படுத்துவதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களை முன்வைக்காது குறைந்த விலை மறுக்கப்பட்டு கூடிய விலையில் ரூபா. 186,720 பெறுமதியான கணினி அச்சு இயந்திரமொன்றும் பிளாஸ்டிக் கதிரைகளும் கொள்வனவு செய்கையில் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 178(9) (4) மற்றும் பெறுகைகள் கைநூலின் 5.6, 2.11.3 மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் (5), (10), (11) பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 17 வருமான விடயங்களுக்குரிய ரூபா 22,366,084 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 18 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையில் 45 சதவீதம் முதல் 203 சதவீதத்திற்கு இடைப்பட்ட விலகல்கள் காணப்பட்டன.

(இ) 40 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,310,400 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 26 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 45 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டன.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதம் மற்றும் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய மத்திய மாகாண பிரதான செயலாளரின் சீபீசீ/சீஎம்சீ/1/6 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் காலாண்டிற்கு 01 கூட்டம் என கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு குழுவொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) கணக்கீடு செய்யாமை<br>(ii) கையேற்கப்படாமை<br>(iii) குறைப்பயன்பாட்டுடனும் விளைவற்றும் காணப்படல் |
| (ஆ) | பதவியணியினர் முகாமைத்துவம். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | செயற்திட்டம்/ ஒப்பந்தங்கள் | (i) ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமை<br>(ii) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யாமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை<br>(ii) வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை |